செங்கோட்டை நகராட்சி

31.03.2020 அன்று நடைபெற்ற தீர்மானங்கள்

மன்றப்பொருள்..1

செங்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் தட்டச்சர் பணியிடம் காலியாக இருந்து வருவதால், அலுவலக பணிகள் பாதிக்காத வண்ணம் கணினியில் தட்டச்சு செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் தனியார் மூலமாக தட்டச்சு பணி அனுமதி காலமானது மார்ச் 2020 உடன் முடிவடைகிறது. 2020-21 நிதியாண்டிற்கு அவசிய அவசரம் கருதி விலைப்புள்ளி கோரப்பட்டதற்கும், 23.03.202 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளை கீழ்க்காணும் விலைப்புள்ளி கோரப்பட்டதற்கும், 23.03.2020 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளை கீழ்க்காணும் விவரப்படி ஒப்புநோக்குப்பட்டிய்ல் தயார் செய்யப்பட்டதற்கு ஒப்புதலும் உத்தேச செலவினம் ரூ. 1.50 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணியின் விவரம் | க்யூடெல் கம்யூட்டஸ் அண்ட் டிடிபி சென்டர், செங்கோட்டை | எஸ்ஸார் சிஸ்டம்ஸ் அம்மன் சன்னதி, தென்காசி | பிரண்டஸ் கம்யூட்டர்ஸ் ஜவஹர்லார் நேரு ரோடு, செங்கோட்டை |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி அலுவலக பணிக்காக 2020-21 ஆம் வருடத்திற்கு தட்டச்சு பணி மேறகொள்ள | பக்கம் ஒன்றிற்கு ரூ. 10/- | பக்கம் ஒன்றிற்கு ரூ. 11/- | பக்கம் ஒன்றிற்கு ரூ. 12/- |

அலுவலக குறிப்பு.

1. பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் கணினியில் தட்டச்சு செய்வதற்கு பக்கம் ஒன்றிற்கு ரூ. 10/- வீதம் குறைந்தபட்ச விலைவிகிதமாக விலைப்புள்ளி வழங்கியுள்ள மெஸர்ஸ் க்யூடெல் கம்யூட்டர்ஸ் அண்ட் டிடிபி சென்டர் நிறுவனத்தின் விலைப்புள்ளிக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. பணியின் அவசிய அவசரம் கருதி விலைப்புள்ளி கோரியதற்கும், மேற்படி பணிக்குரி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ளவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 221 ஒப்புதல் வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..2

செங்கோட்டை நகராட்சி, பொது சுகாதாரபிரிவிற்கு 2020-2021 ஆண்டிற்கு தேவையான கீழ்க்கண்ட விவரபடி கிருமி நாசினிகள் கொள்முதல் செய்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ. 3.50 லட்சத்திற்கும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 222 ஒப்புதல் வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..3

செங்கோட்டை நகராட்சி பகுதியில் புதிதாக குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்ற்றிக்கை கடிதம் ந.க.எண்.748/2008/குவ2, நாள் 21.09.2009ன் கீழ் சாலை பராமரிப்பு கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டு, மேலும் ஒவ்வொரு

ஆண்டும் முந்தைய ஆண்டின் தொகையுடன் 5 சதவிகிதம் உயர்த்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதால் அதன் அடிப்படையில் 2020-2021 ஆண்டுக்கு சாலை பராமரிப்பு கட்டணமாக கீழ்க்காணும் முறையில் தயார் செய்யப்பட்டுள்ளதை புதய குடிநீர் இணைப்புகளுக்கு சாலை பராமரிப்பு கட்டணமாக நிர்ணய்ம் செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

| | கருங்கல் ஜல்லி சாலை | | தார் சாலை | | சிமெண்ட் சாலை | |
|---|---|---|---|---|---|---|
| | முந்தைய ஆண்டு கட்டணம் | 2020-2021 ஆண்டிற்கான கட்டணம் | முந்தைய ஆண்டு கட்டணம் | 2020-2021 ஆண்டிற்கான கட்டணம் | முந்தைய ஆண்டு கட்டணம் | 2020-2021 ஆண்டிற்கான கட்டணம் |
| குடிநீர் வழங்கும் பிரதான குழாயில் இருந்து 0 முதல் 30 மீட்டர் தொலைவு உள்ள குடியிருப்புகளுக்கு மட்டும் | ரூ.1711/- | ரூ.1797/- | ரூ.3666/- | ரூ.3849/- | ரூ.4235/- | ரூ.4447/- |
| குடிநீர் வழங்கும் பிரதான குழாயில் இருந்து 30 முதல் 90 மீட்டர் தொலைவு உள்ள குடியிருப்புகளுக்கு மட்டும் | ரூ.2688/- | ரூ.2822/- | ரூ.4643/- | ரூ.4875/- | ரூ.5211/- | ரூ.5472/- |

அலுவலக்குறிப்பு..

மேற்படி புதிய குடிநீர் இணைப்புகளுக்கு புதிய சாலை பராமரிப்பு கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 223 ஒப்புதல் வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்.4

செங்கோட்டை நகராட்சி கணினி வசூல் மையத்திற்கு செலுத்தப்படும் சொத்துவரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்கள் (குத்தகை இனங்கள்) ஆகியவற்றிற்கு பெறப்படும் காசோலைகள் வங்கியில் பணம் செலுத்தியவர்கள் வங்கி கணக்கில் பணம் இல்லாமல் திரும்ப வரும்பட்சத்தில் அல்லது காலாவதியாகும் பட்சத்தில் கீழ்க்கண்ட தொகை அபராதக் கட்டணமாக வசூலிக்கவும், சட்டப்படி பிடித்தம் செய்யவும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

| | அபராதக்கட்டணம் |
|---|---|
| ரூ. 1 முதல் 5,00,000/- வரை | ரூ. 500/- |
| ரூ. 5,00,001 மேல் | ரூ. 1000/- |

அலுவலகக்குறிப்பு..

மேற்படி காசோலைகள் வங்கிகளில் திரும்ப பெறப்பட்டால் மேற்கண்ட அபராதக் கட்டணம் வசூல் செய்யவும், சட்டப்படி வசூலிக்கவும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம்

1920 துணை விதிகள் -ன் படி துணைவிதிகளாக நடைமுறைபடுத்திட மன்றம் அனுமதி வழங்கலாம்..

தீர்மானம் எண். 224 அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்.5.

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதார வாகனம் எண். டி.என் 72 எக்ஸ் 9398 (கார்க்கோ) தகுதிச் சான்று பெறுவதற்குரிய பணிகள் மேற்கொள்ள பொது சுகாதார அவசிய அவசரம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மேற்படி பணிகள் மேற்கொள்ள உத்தேச செலவினம் ரூ. 64000/-க்கும் ஒப்புதலும், 13.03.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியலுக்கு மன்றத்தின் ஒப்புதலும் வேண்டப்படுகிறது.

| வ.எண் | பணிகளின் விவரம் | மூஸா இஞ்சினியரிங் ஓர்க்ஸ், தென்காசி | | நடராஜன் மோட்டார் ஓர்க்ஸ், தென்காசி | |
|---|---|---|---|---|---|
| 1 | நான்கு வீல்களுக்கும் கீரிஸ் பேக்கிங் செய்து, ஆயில் சீல் பேரிங் மாற்றுதல் | 3250 | 1800 | 3500 | 2000 |
| 2 | பிரேக் ஓஸ் மாற்றி பிரேக் சிஸ்ட்ம் ஓவர்ஆயில் செய்தல் | 2950 | 1500 | 3200 | 1800 |
| 3 | கேபின், பிளாட்பார்ம், பின் கதவு மற்றும் வெல்டிங் பணிகள் மற்றும்டிங்கர் ஒர்க்ஸ | 6200 | 7000 | 6400 | 9500 |
| | இஞ்சின், கியர், டிப்பர்,கிரௌன் ஆயில் மாற்றுதல் | | 400 | | 500 |
| | டீசல், ஆயில் பில்டர்கள் மாற்றுதல் | 1600 | 300 | 1700 | 400 |
| | மின் இணைப்புகளை முழுவதும் செக்கிங் செய்து பல்புகள் ஒயர்கள் மாற்றுதல் | 1800 | 1200 | 2000 | 1400 |
| | பக்க கண்ணாடி பிரக்கெட் மற்றும் போல்ட் நட்கள் மாற்றுதல் | 700 | 100 | 800 | 200 |
| | டை ராடு மாற்றி வீல் அலைன்மெண்ட் | 2600 | 1300 | 2800 | 1400 |
| | கிளாட்ச் பிளேட் மற்றும் பிரஷர் பிளேட் மாற்றுதல் | 9900 | 2500 | 10500 | 2700 |
| | சைல்ன்சர் பைப் மற்றும் டும்களை மாற்றுதல் | 1900 | 800 | 2100 | 1000 |
| | வாகனம் மூலம் பெயிண்டிங் செய்து வாசகம் எழுதுதல் | 8800 | | 9500 | |
| | வேக கட்டுபாட்டு கருவி பொருத்துதல் | 6000 | | 6100 | |
| | | 45700 | 16900 | 48600 | 20900 |

அலுவலககுறிப்பு

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள மெஸர்ஸ் மூஸா இஞ்சினியரிங் ஒர்க்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண். 225 அனுமதி வழங்கப்பட்டது.